முருகப்பெருமான் துணை

**மகான் பாம்பாட்டிச்சித்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

23.12.2022, வெள்ளிக்கிழமை

1. அன்பர்கள் மனதுள் சக்தியை
அறமாக வடிவமைத்து அருளி
துன்பம் விரட்டும் ஞானியே
தேசிகனே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது சிலை திங்கள்
குறையிலா அட்டம திகதி புகர் வாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 08 ம் நாள் 23.12.2022, வெள்ளிக்கிழமை)
தெரிவிக்க அனுகூல ஆசிதனை
தேசிகனுக்கு பாம்பாட்டிச்சித்தர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர்வான வள்ளல் ஞானி
ஞானமாக அருளும் சன்மார்க்கம்
ஞானிகளாக மக்களை தேற்றும்
4. தேற்றும் உயர் மார்க்கமாகும்
தேசிகன் காட்டும் தருமவழி
ஆற்றல் கூட்டும் உயர்வழியாகும்
அனுகி உலகோர் அன்னதான சேவை
5. சேவை ஆற்றிவர மக்களுக்கு
செப்பிடுவேன் சக்திபெருகும்
அவனி காக்கும் தரும பலம்
அளவிலா கூடி சிறந்து
6. சிறந்துமே தருமவான்களாகி
செப்பிடுவேன் ஊழதை வெல்லும்
அருந்தவசியின் மூலம் தீட்சைபலமும்
அரங்கனின் தவபலமும் கிட்டி
7. கிட்டியே சகல மாயைகளான
குவலயக் கஷ்டங்கள்தனை வென்று
இட்டம்போல் காரிய வெற்றிகளும்
எல்லா வல்லமையும் கண்டு உயர்வர்
8. உயர்வு பல வந்தாலும் அரங்கன்
உண்மை வழிகளை விட்டகலா
தயவே வடிவான ஞானியரை
தரிசிக்கும் வாய்ப்பை தவறவிடா
9. தவறவிடா தொடர்ந்து வந்து
தடைகளை வெல்லும் ஆற்றலை
அவனியில் தா குருவே என
அனுதினமும் பூஜித்து வருக

10. வருகவே எக்கணமும் ஞானியரின்
    வரமும் ஆசி அருள் துணையும்
    பெருமைபட விட்டகலா வண்ணம்
    பேருலகில் தொடர்ந்து வழிகாட்டி

11. வழிகாட்டி வையகம் தன்னில்
    வாழ்வாங்கு வாழ அருளும்
    அழியாமை தந்துமே காக்கும்
    அறிவித்த அனுகூல ஆசி முற்றே

—சுபம்—